பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

25 01 2025 7 15

<u>தலைப்புச் செய்திகள் -</u>

1. ஒரே நாடு ஒரே தேர்தல் நடைமுறை சிறந்த நிர்வாகத்தை உறுதி செய்யும் என்று குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு கூறியுள்ளார்.
2. நடப்பு ஆண்டிற்கான பத்ம விருதுகள் அறிவிக்கப்பட்டுள்ளன
3. குடியரசுத்தினத்தையொட்டி ஆயுதப்படையினர் 93 பேருக்கு வீர தீர செயல்களுக்கான விருதை மத்திய அரசு அறிவித்துள்ளது.
4. தமிழ் மொழியின் மகத்துவத்தை பரப்பும் வகையில் திருவள்ளுவர் மையங்களையும், இருக்கைகளையும் பிரதமர் திரு நரேந்திரமோடி ஏற்படுத்தி உள்ளதாக தமிழக ஆளுநர் திரு ஆர் என் ரவி தெரிவித்துள்ளார்.
5. இங்கிலாந்துக்கு எதிரான இரண்டாவது டுவெண்டி – டுவெண்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியா வெற்றிபெற 166 ரன் என்ற இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

<u>*--- இனி விரிவான செய்திகள் ---*</u>

**[]<<<>>>[]**

இந்தியர்கள் என்ற நமது கூட்டு அடையாளததின் உறுதியான அடித்தளத்தை அரசியல் அமைப்புச் சட்டம் வழங்குவதாக குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.

குடியரசுத் தினம் நாளை கொண்டாடப்படுவதையொட்டி அவர் இன்று இரவு அகில இந்திய வானொலி மற்றும் தூர்தர்ஷன் வாயிலாக நாட்டு மக்களிடையே உரையாற்றினார்.

நீதி, சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் ஆகியவை நமது நாகரீக பாரம்பரியத்தின் ஒரு பகுதியாக திகழ்கின்றன என்று அவர் கூறினார்.

அரசியலமைப்புச் சட்டத்தின் 75-வது ஆண்டு நிறைவில் நாட்டின் முன்னேற்றம் குறித்து தெரிவித்த அவர், நாடு சுதந்திரம் அடைந்தபோதும், அதன் பின்னரும் பெரும்பாலான பகுதிகள் வறுமையை எதிர்கொண்டிருந்ததாகக் கூறினார்.

இந்நிலையில் நமது விவசாயிகள் கடுமையாக உழைத்து உணவு உற்பத்தியில் நாட்டை தன்னிறைவு அடையச் செய்ததாக அவர் குறிப்பிட்டார்.

உள்கட்டமைப்பு மற்றும் உற்பத்தித்துறையை மாற்றியமைக்க தொழிலாளர்கள் இடைவிடாது பாடுபட்டதாகவும் அவர் கூறினார்.

இந்திய பொருளாதாரம் உலக அளவில் வலுவடைந்து வருவதாக தெரிவித்த அவர், சர்வதேச அளவில் நமது நாடு பிற நாடுகளுக்கு வழிகாட்டியாக திகழ்கிறது என்று குடியரசுத் தலைவர் குறிப்பிட்டார்.

நாட்டின் பொருளாதார வளர்ச்சி விகிதம் தொடர்ந்து அதிகரித்து வருவதாகவும், இதன் மூலம் இளைஞர்களுக்கு அதிக அளவில் வேலைவாய்ப்புக்கள் உருவாகி வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

அனைத்து தரப்பினரையும் உள்ளடக்கிய பொருளாதார வளர்ச்சிக்கு அரசு முன்னுரிமை அளித்து வருவதாகவும், அடிப்படை தேவைகளை, அடிப்படை உரிமைகளாக மத்திய அரசு மாற்றியுள்ளதாகவும் குடியரசுத் தலைவர் கூறினார்.

மின்னணு பணபரிவர்த்தனை, நேரடி பண பரிமாற்ற முறை அனைவரையும் ஊக்குவித்துள்ளதாக அவர் கூறினார்.

வங்கிகளின் வாராக்கடன் குறைந்துள்ளதால், வங்கி அமைப்புகள் ஆரோக்கியமான நிலையில் இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

புதிய குற்றவியல் சட்டங்கள் தண்டனைக்குப் பதிலாக நீதிமுறைக்கு முன்னுரிமை அளிப்பதாக அவர் குறிப்பிட்டார்.

ஒரே நாடு ஒரே தேர்தல் திட்டத்தை வரவேற்ற திருமதி திரௌபதி முர்மு, இது நிர்வாகத்தில் நிலைத்தன்மையை ஊக்குவிக்கும் என்றும் கூறினார்.

மகா கும்பமேளா நிகழ்வு இந்திய பாரம்பரியத்தின் வெளிப்பாடாக திகழ்கிறது என்று அவர் தெரிவித்தார்.

நாட்டின் மொழி வளத்தை பாதுகாக்க 11 செம்மொழிகளில் அரசு ஆராய்ச்சியை ஊக்குவித்து வருவதாகவும் குடியரசுத் தலைவர் குறிப்பிட்டார்.

இளைய தலைமுறையினரின் எதிர்காலத்தை கருத்தில் கொண்டு கல்வித்துறையில் அரசு முதலீட்டை அதிகரித்துள்ளதுடன், அத்துறையின் அனைத்து அம்சங்களையும் மேம்படுத்துவதற்கான முயற்சிகளையும் அரசு எடுத்து வருவதாக அவர் கூறினார்.

கடந்த பத்து ஆண்டுகளில் நியமிக்கப்பட்ட ஆசிரியர்களில் 60 சதவீதத்திற்கும் மேற்பட்டோர் மகளிர் என்பது குறித்து குடியரசுத் தலைவர் மகிழ்ச்சி தெரிவித்தார்.

இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் பெரும் சாதனைகளை படைத்து வருவதாகக் குறிப்பிட்ட திருமதி திரௌபதி முர்மு, அண்மையில் தமது வெற்றிகரமான விண்வெளி டாக்கிங் சோதனை மூலம் நாட்டை மீண்டும் பெருமைப்படுத்தி உள்ளதாகத் தெரிவித்தார்.

விளையாட்டுத் துறையில் நமது நாட்டு வீரர்கள் சிறப்பான பங்களிப்பை வெளிப்படுத்தியதற்கு பாராட்டு தெரிவித்த அவர், அண்மையில் நடைபெற்ற உலக செஸ் சாம்பியன் போட்டியில் டி குகேஷ் பட்டம் வென்றது குறித்தும், ஃபீடே செஸ் ஒலிம்பியாட் போட்டியில் பங்கேற்ற ஆடவர் மற்றும் மகளிர் பிரிவினர் தங்கப்பதக்கம் வென்றது குறித்தும் பெருமிதம் தெரிவித்தார்.

நாட்டின் எல்லையை பாதுகாக்கும் ராணுவ வீரர்கள், பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டுள்ள காவல்துறையினர், துணை ராணுவப்படையினர் உள்ளிட்ட அனைத்து தரப்பு மக்களுக்கும் குடியரசு தின வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்வதாகவும் திருமதி திரௌபதி முர்மு குறிப்பிட்டார்.

**[]<<<>>>[]**

நடப்பு ஆண்டிற்கான பத்ம விருதுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

இதன்படி நாகேஸ்வரரெட்டி உட்பட ஏழு பேருக்கு பத்ம விபூஷன் விருதுகளும், நடிகர் அஜித்குமார் உட்பட 19 பேருக்கு பத்ம பூஷன் விருதுகளும், அர்ஜித்சிங் உட்பட 113 பேருக்கு பத்மஸ்ரீ விருதுகளும் அறிவிக்கப்பட்டுள்ளன.

**[]<<<>>>[]**

குடியரசுத்தினத்தையொட்டி ஆயுதப்படையினர் 93 பேருக்கு வீர தீர செயல்களுக்கான விருதை மத்திய அரசு அறிவித்துள்ளது.

இதில் 11 பேருக்கு அவர்களின் மறைவுக்கு பிந்தைய விருதாக அளிக்கப்படவுள்ளது.

கீர்த்தி சக்ரா விருது மேஜர் மஞ்ஜித் மற்றும் நாயக் தில்வார் கான் ஆகியோருக்கு மறைவுக்கு பிந்தைய விருதாக வழங்கப்படுகிறது

**[]<<<>>>[]**

தமிழ் மொழியின் மகத்துவத்தை பரப்பும் வகையில் திருவள்ளுவர் மையங்களையும், இருக்கைகளையும் பிரதமர் திரு நரேந்திரமோடி ஏற்படுத்தி உள்ளதாக தமிழக ஆளுநர் திரு ஆர் என் ரவி தெரிவித்துள்ளார்.

குடியரசு தினத்தையொட்டி அகில இந்திய வானொலியில் உரையாற்றிய அவர், பனாரஸ் இந்து பல்கலைக்கழகத்தில் சுப்ரமணிய பாரதி இருக்கையும், குவாஹாத்தி பல்கலைக்கழகத்தில் தமிழ் பட்டயப் படிப்பு போன்ற நடவடிக்கைகள் தமிழின் புகழை நாடெங்கும் பறைசாற்றுவதாக குறிப்பிட்டார்.

தமிழக மக்களின் தொழில் திறன் காரணமாக மாநிலம் சிறு குறு மற்றும் நடுத்தர தொழில்துறையில் முன்னணி மாநிலமாக திகழ்கிறது என்று ஆளுநர் தெரிவித்தார்.

ஜவுளி, தோல், வாகன உற்பத்தி, மருந்தியல், ஆகிய துறைகளில் மாநிலம் முன்னேற்றம் அடைந்துள்ளதாகக் அவர் கூறினார்.

கல்வியைப் பொருத்தவரை மாணவர் சேர்க்கை விகிதத்தில் முன்னணி மாநிலங்களில் ஒன்றாக தமிழகம் திகழ்ந்தாலும், பள்ளிகளில் மாணவர்களின் கற்றல் வெளிப்பாடு சிறப்பாக இல்லை என்று அவர் கூறினார்.

தமிழக அரசு பள்ளிகளில் இருக்கும் கற்றல் நிலை மிகவும் கவலை அளிக்கும் விதத்தில் இருப்பதாக ஆளுநர் குறிப்பிட்டார்.

மாநிலத்தில் உள்ள பல்கலைக்கழகங்கள் ஆண்டுதோறும் உருவாக்கும் ஆறாயிரத்திற்கும் மேற்பட்ட முனைவர்களில் ஐந்து சதவீதம் பேரால்கூட தேசிய தகுதித் தேர்வு அல்லது இளநிலை ஆய்வு மாணவர் நிலைக்கான குறைந்தபட்ச ஆய்வுத் தரத்திற்கும் தேர்ச்சிப்பெற முடியவில்லை என்றும் ஆளுநர் குறிப்பிட்டார்.

தங்களது உழைப்பாலும், வியர்வையாலும் நமக்கு சுதந்திரம் பெற்றுத்தந்த தியாகிகளை இந்நாளில் நன்றியுடன் நினைவுகூர்வதாக அவர் கூறினார்.

மக்களுக்கு குடியரசு தின வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்வதாகவும் ஆளுநர் திரு ஆர் என் ரவி தெரிவித்தார்.

[]<<<>>>[]

நாட்டின் 76-வது குடியரசு தினம் நாளை கொண்டாடப்படுகிறது.

அதற்கான அனைத்து ஏற்பாடுகளும் நடைபெற்று வருகின்றன.

தலைநகர் தில்லியில் உள்ள கடமைப்பாதையில் குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு தேசிய கொடியை பறக்கவிட்டு ராணுவ வீரர்களின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக் கொள்கிறார்.

பிரதமர் திரு நரேந்திரமோடி தில்லியில் உள்ள போர் நினைவு சின்னத்தில் மரியாதை செலுத்திய பின், குடியரசுதின கொண்டாட்டங்களில் பங்கேற்கிறார்.

இந்த ஆண்டு குடியரசுதின சிறப்பு விருந்தினராக இந்தோனேஷிய அதிபர் திரு பிரபாவோ சுவியாந்தோ பங்கேற்கிறார்.

குடியரசுதின அணிவகுப்பில் முப்படை வீரர்களின் சாகசங்கள், ராணுவ டாங்கிகள், ஏவுகணைகள் இடம்பெறுகின்றன.

வானில் விமானப்படையின் போர் விமானங்களின் சாகசங்களும் நடைபெறவுள்ளன.

மத்திய அரசின் துறை வாரியான அலங்கார ஊர்திகளும், பல்வேறு மாநிலங்களின் அலங்கார ஊர்திகளும், மாணவ மாணவிகளின் கலை நிகழ்ச்சிகளும் நடைபெறுகின்றன.

முதல் முறையாக ஐயாயிரம் கலைஞர்கள் பங்கேற்கும் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறுகின்றன.

இந்த அணி வகுப்பில் இந்தோனேஷியாவின் தேசிய ஆயுதப்படைகள் மற்றும் ராணுவ இசைக்குழுவும் பங்கேற்கிறது.

குடியரசு தினத்தையொட்டி நாடு முழுவதும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

தில்லியில் குடியரசுதின நிகழ்ச்சி நடைபெறும் பகுதியில் விமானங்கள், ட்ரோன்கள் பறக்க தடை விதிக்கப்பட்டுள்ளது.

விமான நிலையங்கள், ரயில் நிலையங்கள் உள்ளிட்டவற்றில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

குடியரசு தின அணிவகுப்பை பார்வையிட 10 ஆயிரத்திற்கும் மேற்பட்டோருக்கு சிறப்பு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

பஞ்சாயத்து அமைப்புகளின் தலைவர்கள், கைவினைக்கலைஞர்கள், விவசாயிகளுக்கான வருவாய் ஆதரவுத்திட்ட பயனாளிகள் உள்ளிட்டோர் இதில் இடம்பெற்றுள்ளனர்.

குடியரசு தினத்தையொட்டி விமான நிலையங்கள், ரயில்கள் நிலையங்கள், அரசு கட்டிடங்கள் உள்ளிட்ட முக்கிய இடங்கள் மூவர்ண மின் விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டுள்ளன.

**[]<<<>>>[]**

குடியரசுத்தினத்தையொட்டி தமிழகத்தில் ஆளுநர் திரு ஆர் என் ரவி தேசிய கொடியை பறக்கவிட்டு காவல்துறையினரின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக் கொள்கிறார்.

சென்னை மெரினா கடற்கரை சாலையில் நடைபெறும் நிகழ்ச்சியில் பள்ளி கல்லூரி மாணவ மாணவிகளின் கண்கவர் கலை நிகழ்ச்சிகளும் நடைபெறுகின்றன.

**[]<<<>>>[]**

இங்கிலாந்துக்கு எதிரான இரண்டாவது டுவெண்டி – டுவெண்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியா வெற்றிபெற 166 ரன் எடுக்க வேண்டும் என்ற இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.,

சென்னையில் நடைபெற்று வரும் இப்போட்டியில் முதலில் பேட் செய்த இங்கிலாந்து நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் ஒன்பது விக்கெட் இழப்புக்கு 165 ரன் எடுத்தது.

166 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் தற்போது ஆடி வரும் இந்தியா சற்று முன் வரை 42 ஓவரில் 2 விக்கெட் இழப்புக்கு 44 ரன் எடுத்துள்ளது.

**[]<<<>>>[]**

ஆஸ்திரேலிய ஓப்பன் டென்னிஸ் போட்டியில் அமெரிக்காவின் **Madison keys** பட்டம் வென்றுள்ளார்

இன்று நடைபெற்ற மகளிர் ஒற்றையர் பிரிவு இறுதி ஆட்டத்தில் அவர் 6-3, 2-6, 7-5 என்ற செட் கணக்கில் பெலாரசின் **Aryana sabalanka** -வை வென்றார்.

***End of News***